THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 12th March 1935.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

விடுதலைப் போராட்ட வீரர்களைப்பற்றிய தகவல்

* 213 கேள்வி.—**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர்களின் பெயர்களைச் சேகரித்து புத்தகமாக வெளியிட இம்மாநில அரசு ஏதேனும் குழு ஒன்றை அமைத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் யார் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) (1) Sri M. Bhaktavatsalam, Chief Minister—*Chairman.*

(2) Dr. (Kumari) S. Vijayalakshmi—*convener.*

(3) Sri R. Krishnaswamy Naidu.

(4) Sri R. Venkatarajulu.

(5) Sri V. R. Radhakrishnan.

திரு. ஜே. மாதா கவுடர் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுடைய சரித்திரத்தைப் பள்ளிக்கூடங்களிலே மாணவர்களுக்குப் பாடமாக ஏற்படுத்த அரசாங்கம் வழி வகை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலில் அது நூலாகத்தான் தயாரிக்கப்படும். பிறகு அதிலிருந்து மாணவர்களுக்குப் பாட புஸ்தகமாகத் தயாரிக்கலாம்.

புலவர் கா. கோவிந்தன் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் யார் யார் இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களெல்லாம் இந்தப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெரியார் ராமசாமி அவர்களுடைய பெயரும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதை ஒரு குழு ஆராயந்து தயாரித்து வருகிறது. இப்பொழுது அதில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : இந்தக் குழுவின் உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களா ? வேறு கட்சியினரும் இருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் குழுவின் உறுப்பினர்கள் காங்கிரசுக்கு எதிரிகள் அல்ல.

திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் இதைப் படமாக எடுத்து இருக்கிறார்களே அதுபோன்று நமது மாநில சர்க்காரும் படமாகத்தயாரிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய சர்க்கார் உருவாக்கிய திட்டம்தான் இது. இதன் செலவிற்கு ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் உதவி அளிப்பதற்குத்தான் மூன்றில் ஒரு பங்கு தொகையை ஒதுக்கு வதற்கு மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள. அவர்களுடைய திட்டத்தின்படி இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட முக்கியஸதர்கள் இப்போது இருக்கிற வெறுப்பின் காரணமாக இந்தப் பட்டியலில் சேர்க்கப்படாமல் இருக்கிறார்களா எனறு அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முக்கியஸ்தர்கள் மட்டும் அல்ல. சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொண்ட எல்லோரும் இடம் பெறுவார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இருநதவர்களினுடைய பெயர்களும், அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைப்பற்றியும் இதில் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த மாதிரி கனம் உறுப்பினர் வேண்டுமானால் தயாரித்துக்கொள்ளலாம். இது குழுவின் நோக்கம் அல்ல.

திரு. எஸ். முருகையன் : விடுதலைப் போராட்டத்தில் சிறைத் தண்டனை அடைந்தவர்களினுடைய பெயரும் சேர்க்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றியெல்லாம் அந்தக் குழு ஆராய்ந்து ஏற்பாடு செய்யும்.

திரு. செ. மாதவன் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்களைப் பட்டியலில் சேர்ப்பதற்கு ஜில்லாவாரியாக விசாரித்து வருகிறார் களா? அல்லது பத்திரிகைகள் மூலமாக விளம்பரப்படுத்தி சேகரிக்கிறார் களா எனறு அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜில்லாவாரியாக விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பலர் அவர்களுக்கு விரோதமாக இருந்தவர்களால் பல இம்சைக்கு ஆளாகப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களும் இதில் சேர்க்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட விவரங்கள் கொடுப்பதற் கில்லை. இந்தத் தொகுப்பு முடிந்த பிறகு இதில் இடம் பெற்றிருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளலாம்.

புலவர் கா. கோவிந்தன் : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட வட ஆற்காட்டைச் சேர்ந்த அண்ணாமலைப் பிள்ளை அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அது எந்த அளவில் இருக் கிறது எனறு அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இந்தக் கேள்வி எழ வில்லை. இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.